*8*

# உலகத்திலேயே மாபெரும் விஷயம்

## (1 கொரிந்தியர் 13)

*மறு உருவாக்கமான வாழ்வு என்பது*
*அன்பின் வாழ்வாக உள்ளது ...*

*பின்வரும் வரிகளைக் கொண்ட ஒரு பாடல் உள்ளது; "இப்போது உலகத்திற்குத் தேவை அன்பு என்பதே, இனிய அன்பு. அந்த ஒரு விஷயமே கொஞ்சம் மாத்திரம் உள்ளது." அதனுடன் நாம் கருத்து ஒன்றுபடுவோம். மலைகளும் பள்ளத்தாக்குகளும் வயல்களும் ஏராளமாக உள்ளன; பல வீடுகளும் வாகனங்களும் இலவச வழிகளும் பேரங்காடிகளும் ஏராளமாக உள்ளன; பல வீட்டு உபயோக சாதனங்கள் - குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் சலவை இயந்திரங்கள் மற்றும் பாத்திரம் கழுவும் இயந்திரங்கள் போன்றவை உள்ளன; மிகவும் அதிகமான குற்றம் மற்றும் பொய்கூறுதல் மற்றும் களவுசெய்தல் மற்றும் நம்பிக்கைத் துரோகம் ஆகியவை உள்ளன. ஆனால் அன்பு என்பது எப்போதுமே மிகவும் கொஞ்சமாகவே உள்ளது! கிறிஸ்தவருக்கு எப்பொழுமே போதுமான அன்பு இருக்க இயலாது, ஏனென்றால் அன்பு உலகத்தில் மாபெரும் விஷயமாக உள்ளது! அதுவே அன்பைப் பற்றிய அதிகாரமான 1 கொரிந்தியர் 13ல் பவுல் ஏற்படுத்தும் கருத்தாக உள்ளது.*

*12ம் அதிகாரத்தில் பவுல், பரிசுத்த ஆவியானவரின் அற்புத வரங்களைப் பற்றிக் கலந்துரையாடிக் கொண்டிருக்கிந்தார். அந்த அதிகாரத்தை அவர், "இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்று கூறுவதன் முலம் முடிக்கிறார். அந்த "அதிக மேன்மையான வழியாக" என்பது அன்பின் வழியாக உள்ளது. அற்புத வரங்கள் பெரியவைகளாக இருக்க, அன்பு என்பது மாபெரியதாக இருந்தது! உண்மையில், பவுல், அன்பு என்பது மாபெரியதாக மாத்திரம் இருப்பதில்லை - அது மூன்று காரணங்களின் நிமித்தமாக மகாமேன்மையானதாக உள்ளது; என்று கருத்துத் தெரிவிக்கிறார்.*

### அன்பு இல்லாமை எதுவுமே மதிப்புடையதாக இருப்பதில்லை என்பதால் அன்பு மகாப்பெரிய விஷயமாக உள்ளது (1 கொரிந்தியர் 13:1-3)

*இவ்வசனங்களில் பவுலினால் விவரிக்கப்படுகிற மனிதனைச் சித்தரித்துப் பாருங்கள். அவர் திறனுடன் பேசக்கூடியவராக இருக்கிறார். அவர் தீர்க்கதரிசன வரத்தைக் கொண்டிருக்கிறார்; அவர் இரகசியங்களைப் புரிந்து கொள்கிறார்;*

*அவர் அற்புதமான அறிவைக் கொண்டிருக்கிறார். அவர் விசுவாசத்தின் - "மாபெரும் விசுவாசத்தின்" அதாவது மலைகளைப் பேர்க்கத்தக்கதான விசுவாசத்தின் மனிதராகவும் இருக்கிறார். மற்றும் அவர் தாராளமாகக் காணிக்கை கொடுக்கிறார்; அவர் தாம் கொண்டுள்ள எல்லாவற்றையும் கொடுக்கிறார். கடைசியாக அவர் சுயதியாகம் செய்பவராக இருக்கிறார்; அவர் தமது உடலை சுட்டெரிக்கக் கொடுக்கிறார்.*

*இப்படிப்பட்ட மனிதரைக் கற்பனை செய்து பாருங்கள்; பேச்சுத்திறமை கொண்ட, வரங்கள் பெற்ற, அறிவுடைய ஒரு மனிதர்; மாபெரும் விசுவாசம் கொண்ட ஒரு மனிதர்; எல்லாவற்றையும் கொடுக்கிற பின்பு தம்மையே கொடுக்கிற ஒரு மனிதர்! நாம் பின்வருமாறு கூறச் சாய்கிறோம்: என்ன ஒரு ஆச்சரியமான மனிதர்! என்ன ஒரு மாபெரும் கிறிஸ்தவர்! ஆனால் இம் மனிதரைப் பற்றிய வேறுசில விஷயங்கள் உள்ளன: அவர் மற்றவர்களை நேசிப்பதில்லை! அப்படியென்றால் இவரைப்பற்றிப் பவுல் என்ன கூறுகிறார்? அவரது பிரசங்கித்தலும் போதித்தலும் பயனற்றவைகளாக உள்ளன; அவர் "ஒரு சத்தமிடும் மணியாக அல்லது ஓசையிடும் கைத்தாளமாக" இருக்கிறார்; அவர் ஏதொன்றையும் நிறைவேற்றுவதில்லை. அவர் ஒன்று மற்றவராக இருக்கிறார்! மற்றும் அவரது நல்ல செயல்கள் யாவும் அவருக்கு எந்தப் பிரயோஜனத்தையும் கொண்டுவருவதில்லை! அப்படிப்பட்ட மனிதரைப் பார்த்து நாம், "அவர் ஏதேனும் கொண்டுள்ளவர் அல்லவா!" என்று கூறுகிறோம். அவரைப் பார்க்கும் தேவனோ, "அவர் ஒன்றுமில்லை!" என்று கூறுகிறார்.*

*அன்பு இல்லாத நிலையில், நீங்கள் செய்கிற வேறு எதுவும் மதிப்பு கொண்டிருப்பதில்லை. நீங்கள் பேச்சுத்திறன் உடையவராக, வரம் பெற்றவராக, அறிவுநிறைந்தவராக மற்றும் விசுவாசம் நிறைந்தவராக இருக்கலாம். ஆனால் அன்பு இல்லாத நிலையில். அது ஏதொன்றையும் நிறைவேற்றுவது இல்லை, மற்றும் நீங்கள் ஒன்றுமில்லை. நீங்கள் உபகாரசிந்தை உள்ளவராகவும் சுயத்தைத் தியாகம் செய்பவராகவும் இருக்கலாம்; நீங்கள் உங்களை உட்பட எல்லாவற்றையும் கொடுக்கலாம். ஆனால் அதை நீங்கள் அன்பினிமித்தமாக இன்றி, தவறான நோக்கத்திற்காகச் செய்தால், அது உங்களுக்கு ஒரு பிரயோஜனத்தையும் அளிப்பதில்லை. அன்பு இல்லாத நிலையில் வேறு எதுவும் மதிப்புடையதாக இருப்பதில்லை. தனிப்பட்ட அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அற்புத வரங்களைப் பற்றி, நீங்கள் அவ்வாறு கூற இயலாது. வேறு எதைப்பற்றியும் நீங்கள் அவ்வாறு கூற இயலாது. இவ்வாறாக, அன்பு என்பது உலகத்திலேயே மாபெரும் விஷயமாக உள்ளது!*

## அன்பு என்பது மற்ற பல நெறிகளை உள்ளடக்குகிறது என்பதால் அது மாபெரும் விஷயமாக உள்ளது *(1 கொரிந்தியர் 13:4-7)*

*அன்பின் பண்புகள் பற்றிய இந்தப் பட்டியலை வாசிப்பதிலிருந்து நாம் பல விஷயங்களைக் கற்றுக்கொள்கிறோம்.*

**அற்புத வரங்களைக் காட்டிலும் அன்பு பெரியதாக இருப்பது ஏன் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்**

*முதல் நூற்றாண்டின் அற்புத வரங்கள் எல்லாவற்றையும்விட அன்பு பெரியதாக இருப்பது ஏன் என்பதற்கு இந்தப் பத்தியில் இரு காரணங்கள் கருத்தாகத் தெரிவிக்கப்படுகின்றன.*

*அன்பு என்பது கிறிஸ்தவ வாழ்வில் அற்புத வரங்கள் உண்டாக்க இயலாத பண்புகளை உண்டாக்குகிறது என்பதால் ஒரு விஷயத்தில் அது பெரியதாக உள்ளது. அன்பு என்பது நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அதற்குப் பொறாமையில்லை, அது தன்னைப் புகழாது முதலியவற்றைப் பவுல் கூறுகிறார். ஆனால் ஆவியானவரின் தனித்தனி வரங்களைப் பற்றி அல்லது ஒரு முறைமை என்ற வகையில், அற்புத வரங்களின் முறைமையைப் பற்றி நீங்கள் அவ்வாறு எதுவும் கூற இயலாது.*

*இன்னொரு விஷயத்தில் அன்பு என்பது மாபெரும் விஷயமாக உள்ளது, ஏனென்றால் அற்புத வரங்கள் என்பவை கொரிந்து சபையில் பிரச்சனையின் பாகமாக இருந்தன, ஆனால் அன்பு என்பது தீர்வுக்குத் திறவுகோலாக இருந்தது. அற்புத வரங்கள் என்பவை விரோதத்தின் ஆதாரமுலமாக இருந்தன. மாபெரும் அற்புத வரங்களைக் கொண்டிருந்தவர்கள் யார் என்பது பற்றிக் கொரிந்தியர்கள் விவாதம் செய்துகொண்டிருந்தனர் என்று 12 மற்றும் 14ம் அதிகாரங்களில் இருந்து நாம் அறிகிறோம். தாங்கள் மிகச்சிறந்த வரங்களைக் கொண்டிருந்ததாகக் கருதியவர்கள், தாங்கள் தாழ்வான வரங்கள் என்று கருதியவற்றைக் கொண்டிருந்தவர்களைச் சிறுமையாகக் கண்ணோக்கினர். தாழ்வான வரங்கள் என்று கருதப்பட்டவற்றைக் கொண்டிருந்தவர்கள் தங்களைக் குறித்து அவசிய மற்ற வகையில் உணர்ந்தனர். மற்றும், கொரிந்து சபையானது அற்புத வரங்களில் வளமுள்ளதாக இருந்தாலும், அது ஆவிக்குரிய வகையில் எல்லா வகையான பிரச்சனைகளாலும் அலைக்கழிக்கப்பட்டும் இருந்தது. ஆவியானவரின் அற்புத வரங்கள் அவர்களின் ஆவிக்குரிய பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க முடியவில்லை, ஆனால் அன்பு அதைச் செய்ய முடிந்தது!*

*அன்பு அவர்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முடிந்தது, உதாரண மாக, கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்கள் பொறாமையின்றியும் தங்களைப் புகழா மலும் இருந்திருந்தால், அவர்கள் பெற்றிருந்த வரங்களில் இருந்த வேறுபாடுகள் அவர்களுக்குள் ஒரு வேறுபாட்டை உருவாக்காது. அவர்கள் சுயநலமற்றவர்களாக இருந்தால், அவர்கள் ஒருவர் மீது மற்றவர் அக்கறையுள்ளவர்களாக மற்றும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்பதா இல்லையா என்பதை ஆழ்ந்து சிந்திக்கும் போது தங்கள் சொந்த விருப்பங்கள்மீது மாத்திரம் அக்கறை கொள்ளாதவர்களாக இருப்பார்கள். அவர்கள் அநியாயத்தில் சந்தோஷப்படாதி ருப்பார்கள் ஆனால் சத்தியத்தில் சந்தோஷப்படுவார்கள், அவர்கள் சபையில் பாவத்தைச் சகித்துக்கொள்ளாதிருப்பார்கள், அவர்கள் நீடிய சாந்தமும் தயவும் உள்ளவர்களாக மற்றும் எரிச்சலும் வெறுப்பும் இல்லா தவர்களாக இருந்தால், சபையில் ஒருமைப்பாடு இல்லாமையின் பிரச்சனை தீர்க்கப்பட்ட முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அன்பு என்பது, அற்புத வரங்களால் மோச மாக்கப்பட மாத்திரம் கூடிய பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும்.*

## புதிய ஏற்பாட்டின் அன்பு என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்

"அன்பு" என்ற வார்த்தையை நாம் பல வழிகளில் பயன்படுத்துகிறோம்; நாம், "எனது மனைவியை நான் அன்புகூருகிறேன்"; "எனது நண்பர்களை நான் அன்பு கூருகிறேன்"; "எனது நாயை நான் அன்புகூருகிறேன்"; "எனது நாட்டை நான் அன்புகூருகிறேன்"; "ஆப்பிள் கேக்கை நான் விரும்புகிறேன்" என்பவற்றை சம அளவிலான ஊக்கத்துடன் கூற வாய்ப்புள்ளது. ஆனால் அன்பைப் பற்றி நாம் பேசுகிறபோது, எப்போதுமே உணர்வெழுச்சிமிக்க, உணர்வுள்ள விஷயத்தை ஏறக்குறைய அர்த்தப்படுத்துகிறோம்.

இதற்கு நேர்மாறாக, உணர்வுப் பூர்வமான அர்த்தம் சிறிதளவே உள்ள கிரேக்க வார்த்தையான *agape* என்பதே அன்பு என்பதற்கு 1 கொரிந்தியர் 13ல் பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தையாக இருக்கிறது. *Agape* என்பது அடிப்படையில் ஒரு உணர்வாக அல்லது ஒரு உணர்வெழுச்சியாக இருப்பதில்லை. நாம் அன்புகூரும்படி கட்டளையிடப் பட்டிருக்கிறோம் என்பதை நினைவுகூருதல் அந்த உண்மையைச் செயல்விளக்கப்படுத்தும் ஒருவழியாக உள்ளது. ஆனால் ஒரு உணர்வானது கட்டளையிடப்பட முடியாது. கட்டளைகள் மனவிருப்பத் திற்கு உரைக்கப்படுகின்றன. இவ்வாறாக நாம் கொண்டிருக்க வேண்டிய அன்பு என்பது ஒரு உணர்வெழுச்சியாக இருப்பதில்லை, ஆனால் மனவிருப்பம் கொண்டிருக்கக்கூடிய விஷயமாக உள்ளது. நாம் அன்புசெய்கிறோமா என்பது உணர்வுகளை அல்ல ஆனால் மனவிருப்பத்தைப் பொறுத்த விஷய மாக உள்ளது. ஆகையால், *agape* என்பது தீர்மானம் செய்யப்பட்ட நல் மனவிருப்பம் போன்ற, நீங்கள் அன்புகூருபவருக்கு நன்மை செய்தல் என்ற தீர் மானத்தை அர்த்தப்படுத்துகிறது.

எனவே "அன்பு" என்பது மற்றவர்களைப் பற்றி *உணர்வுகிறது* போன்ற விஷயமாக மாத்திரம் இருப்பதில்லை; இது அன்பான வழியில் மற்ற வர்களிடத்தில் *செயல்படுதல்* என்று அர்த்தப்படுகிறது. இது அவர்களிடத்தில் நீடியசாந்தத்துடனும் தயவுடனும் இருத்தல், சுயநலமின்றிச் செயல்படுதல், இறுமாப்பாக, முரட்டுத்தனமாக அல்லது எரிச்சலுடன் இருக்க மறுத்தல் என்று அர்த்தப்படுகிறது. இந்தக் கருத்தில் நாம், நமக்கு விருப்பம் இல்லாதவர்களிடத்தில் கூட அன்புகூர முடியும்; நாம் மற்றவர்களுக்கு நல்லவற்றை விரும்ப முடியும்; மற்ற வர்களிடம் அன்புடன் செயல்பட முடியும், மற்றவர்களை சரியாக நடத்த முடியும், மற்றவர்களைக் குறித்து அக்கறை கொள்ளாத நிலையிலும் அல்லது அவர்கள் மீது எவ்விதமான பிரியத்தையும் உணர முடியாத நிலையிலும் கூட நாம் இவைகளைச் செய்யமுடியும்.

## நாம் அன்புகூர்ந்தால் நாம் எவ்வாறு செயல்படுவோம் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்

நாம் அன்புகூர்ந்தால், *நாம் நீடிய சாந்தத்துடன் இருப்போம்*; மற்ற வர்களை அன்புகூருவதில் நாம் விடாமுயற்சியுடன் இருப்போம். *நாம் இரக்கமுள்ளவர்களாகவும் இருப்போம்*; மேலும் நாம் மற்றவர்களின் உணர்வுகள் பற்றி அக்கறையுடன் இருப்போம் மற்றும் அவர்களுக்கு வாழ்வைச் சுலபமான தாக்க நம்மால் முடிந்தவற்றைச் செய்வோம்.

நாம் அன்புகூர்ந்தால், *நாம் பொறாமை கொண்டிருக்க மாட்டோம்*,

எடுத்துக்காட்டாக, நம்மைக் காட்டிலும் சிறந்த வரங்களைக் கொண்டுள்ளவர்கள் என்று நாம் கருதுகிறவர்கள் மீது அல்லது யாரேனும் ஒருவர் நாம் பெறத் தகுதி யான புகழ்ச்சி அல்லது பதவி உயர்வு அல்லது வெகுமதியைப் பெறுகிறபோது, அவர்கள் மீது பொறாமை கொண்டிருக்க மாட்டோம். அல்லது, நாம் நமது வரங்கள் குறித்து *இறுமாப்பு நிறைந்தவர்களாக இருக்க மாட்டோம்.* எடுத்துக்காட்டாக, நாம் மற்றவர்களிடம் நம்மைப் பற்றி உயர்வாகப் பேசவேண்டியிருக்கும்படியான நமது மாபெரும்தன்மைகள் மற்றும் திறமை கள் ஆகியவற்றை நமது நினைவுகளில் அதிகமாகக் கொண்டிருக்க மாட்டோம். நாம் *அயோக்கியமாக,* இறுமாப்பாக, தற்பொழிவை நாடுபவர்களாக அல்லது மேட்டிமை நிறைந்தவர்களாக *இருக்க மாட்டோம்;* நாம், மற்றவர்களைக் காட்டிலும் நம்மைச் சிறந்தவர்கள் என்று கருதமாட்டோம்.

நாம் அன்புகூர்ந்தால், *நாம் முரட்டுத்தனவர்களாக இருக்க மாட்டோம்;* இது, அன்பு என்பது மரியாதையானதாக உள்ளது என்று அர்த்தப்படுவதாக ஒரு பதிப்பு கூறுகிறது. *அல்லது நாம் நமது சொந்த வழியை வலியுறுத்திக் கொண்டிருக்க மாட்டோம்;* ஒருவேளை வேறு எதைக் காட்டிலும் அதிகமான, அன்பு என்பது சுயநலமற்றதாக உள்ளது.

நாம் அன்புகூர்ந்தால், *நாம் எரிச்சல் உள்ளவர்களாக இருக்க மாட்டோம்;* KJV வேதாகமம், அன்பு என்பது “சுலபமாகக் கோபப்படுத்தக் கூடியதாக இருப்ப தில்லை” என்று கூறுகிறது. நாம் அன்புகூரும்போது நமது தோள்களில் நாம் ஒரு கல்லைச் சுமந்துகொண்டு அதை மற்றவர்கள் தள்ளிப்போட வேண்டும் என்பதற்காகக் காத்திருப்பதுபோல நடந்துகொள்ளவில்லை. அல்லது நாம் நமது உணர்வுகளை நமது சட்டைக் கைப்பகுதியாக அணிந்துகொண்டு மற்றவர்களால் தொடர்ந்து அதன்மூலம் புண்படுத்தப்பட்டுக் கொண்டு இருப்பதில்லை. *அல்லது நாம் வெறுப்புநிறைந்தவர்களாக இருப்பதில்லை;* ஒரு பதிப்பு இதைப் பின்வரு மாறு மொழிபெயர்க்கிறது; “அன்பு என்பது தவறுகளை எண்ணிக்கை வைப்ப தில்லை.”

நாம் அன்புகூர்ந்தால், *நாம் அநியாயத்தில் சந்தோஷப்பட மாட்டோம்.* தீமையானது வெற்றி கொள்ளும்போது, நமது விரோதிகளுக்கு மோசமான சில விஷயங்கள் நடைபெறும்போது கூட, நாம் மகிழ்வடைய மாட்டோம். மாறாக *நாம் சத்தியத்தில் சந்தோஷப்படுவோம்;* சத்தியமானது மேலோங்கியிருக்கும் போதெல்லாம் அல்லது நன்மை செய்யப்படும் போதெல்லாம், அது நமது விரோதிகளால் செய்யப்பட்டாலும்கூட நாம் அதில் மகிழ்வடைவோம்.

நாம் உண்மையாகவே அன்புகூர்ந்தால்; *நமது அன்பு எல்லாவற்றையும் சகிக்கிறது.* நாம் எந்தப் பிரச்சனையைக் கொண்டிருந்தாலும், தொடர்ந்து நாம் அன்புகூருகிறோம். *நமது அன்பு எல்லா விஷயங்களையும் நம்புகிறது.* அன்பு என்பது சந்தேகம் கொண்டிருப்பதில்லை என்று ஒரு பதிப்பு கூறுகிறது. *நமது அன்பு எல்லா விஷயங்களையும் நம்புகிறது.* நாம் மற்றவர்களுக்கு மிகச் சிறந்தவற்றை எப்போதுமே எதிர்பார்த்து விஷயங்கள் நல்லபடியாக வேண்டும் என்று முன்னெதிர் நோக்குகிறோம். *நமது அன்பு எல்லாவற்றையும் தாங்குகிறது;* நாம் துன்புறுத்தப்பட்டாலும் அல்லது வெறுக்கப்பட்டாலும் கூட நாம் தொடர்ந்து அன்புகூருவோம்.

*நீங்கள் அன்புகூர வேண்டிய பிரகாரம் அன்புகூருகிறீர்களா? நீங்கள் அவ்வாறு* செய்தால், உங்கள் நடக்கையானது, பொறுமை, தயவு, மரியாதை, சுயநல

*மற்றதன்மை, நற்பண்பு முதலியவற்றால் பண்புபடுத்தப்படும். எந்த மனிதரும் பரிபூரணமாக அன்புகூருவதில்லை என்பது உண்மையே. இந்தப் பண்புகளை அடைய செயல்படுவதன் மூலமாக நாம் இவ்வகையான அன்பில் வளருகிறோம். ஆனால் நாம் பக்குவமடைந்திருக்கிறபோது, இவ்வாறே நாம் இருக்க வேண்டிருக்கிறது.*

*அதை நமது மனதில் பதியச் செய்வதற்கு, ஒருவேளை முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இன்னொரு பிரசங்கியார் செய்ததாக நான் கேள்விப்பட்டதைக் குறித்துச் சிலவற்றைச் செய்ய என்னை அனுமதியுங்கள்.தேவன் அன்பாக இருக்கிறார் என்று வேதாகமம் கூறுவதால்,இவ்வசனங்களில் "அன்பு" என்ற வார்த்தைக்குப் பதிலாக "தேவன்" என்ற வார்த்தையைப் பதிலியாக நீங்கள் இடமுடியும் என்று அவர் கூறினார்; "தேவன் நீடிய சாந்தமும் தயவுமுள்ளவர்; தேவனுக்குப் பொறாமையில்லை; தேவன் தன்னைப் புகழமாட்டார், இறுமாப்பாயிருக்கமாட்டார்; ..." தேவன் எப்படி இருப்பார் என்று கிறிஸ்து நமக்குக் காண்பித்துள்ளார் என்பதால், மற்றும் அவர் பூமியில் இருக்கையில் அன்பின் வாழ்வை அவர் வாழ்ந்தார் என்பதால், இவ்வசனப் பகுதியை நீங்கள் "அன்பு" என்ற வார்த்தைக்குப் பதிலியாக "கிறிஸ்து" என்ற வார்த்தையை இட்டும் வாசிக்க முடியும்: "கிறிஸ்து நீடிய சாந்தமும் தயவுமுள்ளவர்; கிறிஸ்துவுக்குப் பொறாமையில்லை; கிறிஸ்து தன்னைப் புகழமாட்டார்; இறுமாப்பாயிருக்க மாட்டார்; ... ."*

*ஆனால் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்க வேண்டும். எனவே நீங்கள் பின்வருமாறும் இதை வாசிக்க முடியும்; "கிறிஸ்தவர் நீடிய சாந்தமும் தயவுமுள்ளவர்; கிறிஸ்தவருக்குப் பொறாமையில்லை; கிறிஸ்தவர் தன்னைப் புகழமாட்டார், கிறிஸ்தவர் இறுமாப்பாயிருக்க மாட்டார்; கிறிஸ்தவர் அயோக்கியமானதைச் செய்யமாட்டார், தற்பொழிவை நாடமாட்டார், சினமடையமாட்டார், தீங்கு நினைக்க மாட்டார், அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படுவார். ஒரு கிறிஸ்தவர் சகலத்தையும் தாங்குவார், சகலத்தையும் விசுவாசிப்பார், சகலத்தையும் நம்புவார், சகலத்தையும் சகிப்பார்."*

*இருப்பினும், நம்மில் ஒவ்வொருவரும் அதைப்போல் இருக்க வேண்டும் என்பதே, அதன் அர்த்தம் ஆகும். ஆகவே அதை நாம் திரும்பவும் வாசிப்போமாக இப்போது நாம், "கிறிஸ்தவர்" என்ற வார்த்தைக்குப் பதிலாக, தன்மைப் பெயர்ச்சொல்லான "நான்" என்பதைப் பயன்படுத்தி வாசிப்போம். "நான் நீடிய சாந்தமும் தயவுமுள்ளவன்; எனக்குப் பொறாமையில்லை;நான் என்னைப் புகழமாட்டேன், இறுமாப்பாயிருக்க மாட்டேன், அயோக்கியாமானதைச் செய்யமாட்டேன், தற்பொழிவை நாடமாட்டேன், சினமடையமாட்டேன், தீங்கு நினைக்க மாட்டேன், அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படுவேன். சகலத்தையும் தாங்குவேன், சகலத்தையும் நம்புவேன், சகலத்தையும் சகிப்பேன்." அதை நான் ஒரு தாழ்மையான அனுபவமாகக் கண்டறிகிறேன். அந்த விவரிப்பில் நான் கணிசமாகக் குறைவுபடுகிறேன். உங்களைப் பற்றி விஷயம் என்ன? கருத்து பின்வருமாறு; இப்போது நாம் எவ்வளவாகக் குறைவுபட்டாலும், அதைப் போன்ற மக்கள் நாம் பிரயாசப்பட வேண்டும்!*

## அன்பு என்பது ஒருக்காலும் ஒழியாது என்பதால் அது உலகத்திலேயேமாபெரும் விஷயமாக உள்ளது
## *(1 கொரிந்தியர் 13:8-13)*

*"அன்பு ஒருக்காலும் ஒழியாது!" அன்பு என்பது உலகத்திலேயே மாபெரும் விஷயமாக இருப்பதற்கு அது ஒரு காரணமாக உள்ளது!*

*இது அற்புத வரங்களுடன் அன்பை நேர்மாறாக்குகிறது. 1 கொரிந்தியர் 12:8-10ல் பவுல் ஒன்பது மாறுபட்ட வரங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார். 1 கொரிந்தியர் 13:8ல் அவர் இவற்றில் மூன்றைக் குறிப்பிட்டு, இந்த மூன்றும் ஒழிந்துபோகும் என்று கூறுகிறார். இந்த மூன்றும் அந்த ஒன்பது வரங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்று நான் நம்புகிறேன். இந்த மூன்றும் ஒழிந்து போகும் என்று பவுல் கூறுகையில், அந்த ஒன்பதும் ஒழிந்துபோகும் என்றே கூறுகிறார். அற்புத வரங்களின் முறைமை முழுவதும் ஒழிந்துபோகும். ஆனால் அன்பு நிலைத்திருக்கும்!*

*அந்த அற்புத வரங்கள் எப்போது ஒழிந்துபோகும்? பக்குவமடையும் ஒரு காலத்தைப் பற்றிப் பவுல் பேசுகிறார். வரங்கள் என்பவை குறைவான செயல்பாடு (1 கொரிந்தியர் 13:9) அல்லது பக்குவமற்றவையைக் குறித்தவையாய் இருந்தன. ஆனால் பக்குவமற்ற அந்தக் காலம், "நிறைவானது" அதாவது பக்குவத்தின் காலம் வரும்போது ஒழிந்துபோகும் (1 கொரிந்தியர் 13:10). அற்புத வரங்களின் காலம் என்பது பிள்ளைப்பிராயத்தின் பக்குவமற்ற தன்மையைப் போல இருக்கிறது (1 கொரிந்தியர் 13:11). ஆனால் அது, பக்குவம் வருகிறபோது ஒழிந்து போக வேண்டியதாக உள்ளது, இது ஒரு மனிதர் வயது கூடுகிறபோது தமது வரங்களின் சிறுபிள்ளைத் தனமான வழிகளை விட்டுவிடுவது போன்றதாகும் (1 கொரிந்தியர் 13:11). அற்புத வரங்களின் முறைமை என்பது ஒரு தெளிவான உருவத்தை உங்களுக்குக் காண்பிக்காத கண்ணாடி ஒன்றில் பார்ப்பது போன்றதாக உள்ளது, ஆனால் பக்குவத்தின் காலம் என்பது அப்படிப்பட்ட கண்ணாடி ஒன்றில் உங்களைத் தெளிவாகக் காணுதல் போன்றதாக இருக்கும் (1 கொரிந்தியர் 13:12). பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் பயன்பாட்டில் இருந்த காலமான பக்குவமற்ற தன்மையின் காலமானது முழுமையற்ற புரிந்துகொள்ளுதலின் காலமாக மாத்திரமே இருந்தது; பக்குவத்தின் காலம் என்பது நிறைவான புரிந்துகொள்ளுதலின் காலமாக இருக்கும் (1 கொரிந்தியர் 13:12).*

*அந்தப் பக்குவத்தின் காலம் எப்போது வரும்? கிறிஸ்து மறுபடியும் வரும்போது அது வரும் என்று சிலர் நினைக்கின்றனர். அவர்கள், 10ம் வசனத்தில் உள்ள - "நிறைவானது வரும்போது" - என்பது கிறிஸ்துவைக் குறிப்பிடுவதாக, அதாவது "கிறிஸ்து மறுபடியும் வரும்போது" என்று அது கூறுவதாக நம்புகின்றனர். அந்த விளக்கத்தில் பல பிரச்சனைகள் உள்ளன, ஆனால் அந்த வார்த்தை நடுநிலையாக உள்ளது என்பது ஒரு பிரச்சனையாக உள்ளது. நேரடியான அர்த்தத்தில் அது, "நிறைவான* காரியம் *வரும்போது" என்று கூறுகிறது. கிறிஸ்துவின் வருகையைப்பற்றிப் பவுல் நடுநிலைப் பால் சொல்லில், ஒரு விஷயமாகக் குறிப்பிடுவார் என்பது குறைந்தபட்சம் மிக உயர்வாகச் சாத்தியமற்றதாக உள்ளது! இந்த சந்தர்ப்பப்பொருளில் பவுல், அற்புத வரங்களின் போதுமற்ற தன்மையைக் காண்பிக்க முயற்சி செய்கிறார் என்பது இன்னொரு பிரச்சனையாக உள்ளது. அற்புதவரங்களின் முறைமையானது கிறிஸ்துவின்*

*மறுவருகை வரையிலும் இருக்கும் என்று அவர் கூறினார் என்றால், அவர் தமது நோக்கத்தை தோல்வியடையச்செய்திருப்பார்! அற்புத வரங்கள் என்பது இரண்டாம் வருகைக்கு அப்பால் ஒழிந்து போகுமா இல்லையா என்பது கொரிந்தியர்களிடத்தில் என்ன வேறுபாட்டை ஏற்படுத்தியது; அவர்கள் இந்த வாழ்வில் அப்படிப்பட்ட வரங்களைக் குறித்து ஆர்வமுள்ளவர்களாக மாத்திரம் இருந்தனர். அந்த வரங்கள் அவ்வளவு நாட்கள் நீடித்திருக்கும் என்று கேள்விப்பட்டால் அவர்கள் சந்தோஷப்பட்டு இருப்பார்கள். பவுல், "நீங்கள் அந்த வரங்களைச் சார்ந்திருப்பதில் எவ்வளவு மதியீனமாக இருக்கிறீர்கள் என்று நான் காண்பிக்கட்டும். ஒரு விஷயத்தில், அவைகள் இரண்டாயிரம் ஆண்டுகள் மாத்திரம் அல்லது கிறிஸ்து மறுபடியும் வரும்வரையில் அவை நிலைத்திருக்கப் போகின்றன!" என்று பவுல் கூறியிருக்கமாட்டார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த இரண்டு காரணங்களுக்காக பவுல், கிறிஸ்துவின் மறுவருகையைக் குறித்து கூறியிருக்க முடியாது.*

*அப்படியானால் பவுல் எதைக் குறிப்பிடுகிறார்? சபை பக்குவமடைதலை அவர் குறிப்பிடுகிறார்! சபையானது தனது பச்சிளம்குழந்தைப் பருவத்தில் இருந்தது; அது ஒரு சிறுபிள்ளையைப் போல் இருந்தது. சபையானது தனது பிள்ளைப் பிராயத்தைக் கடந்த வருவதற்கு அதற்கு அற்புத வரங்கள் தேவைப்பட்டன. ஆனால் அது அந்தப் பிள்ளைப் பிராயத்தைக் கடந்து தேவனுடைய எல்லா வெளிப்பாடுகளையும் பெற்றுக்கொண்டபோது, அதற்கு இனியும் அற்புத வரங்கள் தேவைப்படவில்லை. ஆகவே, "நிறைவானது வரும்போது" என்பது சபையின் பக்குவடைந்த தன்மையைக் குறிக்கிறது.*

*ஆனால், பரிசுத்த ஆவியானவரின் அற்புதவரங்கள் ஒழிந்துபோக வேண்டியதாக இருந்தபோதும்கூட, சபை பக்குவம் அடைந்த பின்னரும் அன்பு தொடர்ந்து இருக்க வேண்டியதாயிற்று!*

*ஆனால் 1 கொரிந்தியர் நிருபத்தின் பிந்திய பகுதியும்கூட, அன்பை விசுவாசம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றுடன் நேரெதிராக ஒப்பிடுகிறது. "அன்பு ஒருக்காலும் ஒழியாது" என்பதைக் கவனியுங்கள்; அடுத்ததாக அவர், அற்புத வரங்கள் ஒழிந்துபோகும் என்று கூறுகிறார்; கடைசியாக அவர் பின்வருமாறு கூறுகிறார்; "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது." பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் ஒழிந்துபோகும், ஆனால் மூன்று விஷயங்கள் எஞ்சியிருக்கும் அல்லது நிலைத்திருக்கும்; விசுவாசம், நம்பிக்கை, அன்பு! அந்த அற்புத வரங்கள் ஒழிந்துபோன பின்பு, விசுவாசமும் அன்பும், நம்பிக்கை, அன்பு! அந்த வரங்கள் ஒழிந்துபோன பின்பு, விசுவாசமும், அன்பும், நம்பிக்கையும் இன்னும் சுற்றிச் சூழ்ந்திருக்கும். ஆகையால், விசுவாசம், அன்பு, நம்பிக்கை என்பவை ஆவியானவரின் அற்புத வரங்களுக்கு மேலானவைகளாக உள்ளன.*

*பின்பு பவுல் பின்வருமாறு கூறுகிறார்; "இவைகளில் அன்பே பெரியது." அன்பு என்பது விசுவாசம் அல்லது நம்பிக்கை ஆகியவற்றைக் காட்டிலும் பெரிதாக இருப்பது ஏன்? அதற்குப் பல பதில்கள் இருக்கலாம். அன்பு என்பது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் காட்டிலும் நீடித்திருக்கிறது என்பதே, அன்பு மாபெரியது என்று கூறுவதற்கு இந்த சந்தர்ப்பப் பொருளில் மிகச்சிறந்த காரணமாக இருக்கிறது என்று நான் கருத்துக் கூறுவேன்.*

*கிறிஸ்து மறுபடியும் வரும்போது, விசுவாசம் இனியும் இருக்காது*

*மற்றும் நம்பிக்கை இனியும் இருக்காது. நாம் விசுவாசித்திருக்கிற ஒருவரை நாம் காண்போம்; ஆனால் அது, விசுவாசம் இனியும் இராது என்று அர்த்தப்படுகிறது, ஏனெனில் விசுவாசம் என்பது "தரிசித்து" என்பதற்கு நேரெதிராக "காணப் படாதவைகளை" உள்ளடக்குகிறது (காண்க 2 கொரிந்தியர் 5:6; எபிரெயர் 11:1). மற்றும், கிறிஸ்து மறுபடியும் வரும்போது, நம்பிக்கையானது அதன் நிறைவேற்றத்தைக் கண்டறியும். நாம் எதற்காக நம்பியிருக்கிறோமோ அதை நாம் பெற்றுக்கொண்டவுடன், நம்பிக்கை என்பது இனியும் இராது (ரோமர் 8:24, 25). இருப்பினும் கிறிஸ்து மறுபடியும் வருகிறபோது, அன்பிற்கு முடிவு எதுவும் இராது. பின்பு நாம், நித்தியம் முழுவதிலும் நமது கர்த்தரையும், தேவனையும், பரிசுத்தவான்களையும் தொடர்ந்து அன்புகூர்ந்து கொண்டிருப்போம். மற்றும் தேவனாலும் மற்றவர்களாலும் அன்புகூரப்பட்டுக் கொண்டிருப்போம். அப்பொழுது அன்பு என்பது, இன்றைய நாட்களில் இருப்பதைக் காட்டிலும் நீடித்ததாகவும் விலையேறப் பெற்றதாகவும் இருக்கும். கிறிஸ்துவின் மறு வருகையுடன் விசுவாசமும் நம்பிக்கையும் ஒழிந்து போவதாக இருக்கையில், அன்பு தொடருகிறது. ஆகையால், விசுவாசமும் நம்பிக்கையும் மாபெரும் விஷயங்களாக இருக்கையில், அன்பு என்பது அவற்றைக் காட்டிலும் மாபெரும் விஷயமாக உள்ளது. அன்பு என்பது உலகத்திலேயே மாபெரும் விஷயமாக உள்ளது.*

## *முடிவுரை*

*அன்பு என்பது உலகத்திலேயே மாபெரும் விஷயமாக உள்ளது என்பதே 1 கொரிந்தியர் 13ல் பவுலின் செய்தியாக உள்ளது. கேள்வி பின்வருமாறு; அன்பு என்பது நமக்குள் மாபெரும் விஷயமாக உள்ளதா?*

*அன்பு என்பது சபைக்கு மாபெரும் விஷயமாக உள்ளதா? சபையானது அன்பின்மீது போதிய அளவு வலியுறுத்தம் வைக்கிறதா? அல்லது மற்ற வர்கள் அதன்மீது அதிகமாகப் பிரசங்கிக்கிறார்கள் என்பதற்காக நாம் அந்தப் பாடக்கருத்தைப் புறக்கணித்து விடுகிறோமா? பிரசங்கித்தலில் நாம் அதைப் புறக்கணியாதிருந்தாலும், நடைமுறையில் நாம் அதைப் புறக்கணித்து விடுகிறோமா? பிரசங்கித்தலில் நாம் அதைப் புறக்கணியாதிருந்தாலும், நடைமுறையில் நாம் அதைப் புறக்கணித்து விடுகிறோமா? நாம், அன்புள்ள, அக்கறையான ஐக்கியமுள்ள, ஒருவருக்கொருவர் அக்கறை கொண்டுள்ள, மற்ற வர்களைப் பற்றி அக்கறை கொண்டுள்ள மக்களாக அறியப்பட்டிருக்கிறோமா? நாம் அவ்வாறே இருக்க வேண்டும்.*

*அன்பு என்பது நமது தனிப்பட்ட வாழ்வில் மாபெரும் விஷயமாக உள்ளதா? மனிதர்கள் சத்தியத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாக, வேதவாக்கியங்களில் அறிவுமிக்கவர்களாக, அவிசுவாசிகளின் விவாதங்களை முறியடிக்கக் கூடியவர்களாக இருக்கலாம்; ஆனால் அவற்றை அவர்கள் அன்பு இல்லாமல் செய்யலாம். நமக்கு, கற்றலில் பலவான்களான, சத்தியத்திற்காகப் போராடுபவர்களான, விசுவாசம் மற்றும் தூய்மை ஆகியவற்றில் நாயகர்களான கிறிஸ்தவர்கள் தேவை; ஆனால் நமக்கு அன்பில் பலவான்களாக இருக்கிற கிறிஸ்தவர்களும் தேவை! நாம் அப்படிப்பட்டவர்களைக் கொண்டிருக்கிறோமா? மிகமுக்கியமாக, அன்பைப் பற்றி 1 கொரிந்தியர் 13ம் அதிகாரம் விவரிக்கிற வகையில் அன்புகூரக்கூடிய நபராக ஆவதை நீங்கள் உங்கள் குறிக்கோள்களில்*

*முதன்மைப் பட்டியலுக்கு அருகில் வைத்திருக்கிறீர்களா?*

*அன்பு என்பது, முதலாவது தேவனை நோக்கியதாக இருக்க வேண்டும் என்பது உண்மையே. தேவன்மீது அன்புகூர வேண்டும் என்பதே முதலாவது கட்டளையாக உள்ளது. நீங்கள் அவரை அன்புகூர்ந்தால், நீங்கள் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவீர்கள்.*